**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: செங்கேனி பழனி**

**தேதி: 24.09.2025** **நேரம்: மாலை 6.10 மணி**

*தலைப்புச் செய்திகள்*

பொருளாதார சக்தியாக மேம்பட்டு வரும் இந்தியாவை, கலாச்சார சக்தியின் சின்னமாகவும் வலுப்படுத்த, கூட்டு முயற்சிகள் தேவை என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டின் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்களுக்கு, அங்கீகாரம் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ரயில்வே ஊழியர்களுக்கு, 78 நாள் ஊதியத்தை, **உற்பத்தி திறனுடன் இணைந்த** போனசாக வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இனறு கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டினார்.

*முர்மு* (14)

உலக அளவிலான பொருளாதார சக்தியாக மேம்பட்டு வரும் இந்தியாவை, கலாச்சார சக்தியின் சின்னமாகவும் வலுப்படுத்த கூட்டு முயற்சிகள் தேவை என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு

கூறியுள்ளார். லலித் கலா அகடமி சார்பில், 64 வது தேசிய ஒவியக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அவர் பேசுகையில், கலாச்சார மரபுகளை வளப்படுத்தி, சமூகத்தின் கூர் உணர்வை தூண்டுவதற்கான சக்தி வாய்ந்த ஊடகமே கலை என்றார். திறமையான ஓவியர்களின் கலை படைப்புகளை விற்க, லலித் கலா அகடமி அளித்து வரும் ஆதரவை குடியரசுத் தலைவர் பாராட்டினார். இதனால், கலைஞர்களின் நிதி நிலையும், நாட்டின் படைப்புத் திறன்சார் பொருளாதாரமும் வலுப்பெறும் என்று அவர் தெரிவித்தார். மத்திய கலாச்சார அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், லலித் கலா அகடமியின் துணைத் தலைவர் டாக்டர் நந்தலால் தாக்கூர் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மோடி மருத்துவம் (12)

நாட்டின் மருத்துவ உள் கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்களுக்கு அங்கீகாரம் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். உற்பத்தி திறனும் மக்களின் ஆரோக்கியமும் என்பது குறித்து, புகழ் பெற்ற இருதய நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் தேவி பிரசாத் ஷெட்டி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, இவ்வாறு கூறியுள்ளார். ஆயுஷ்மான் பாரத் ஊட்டச் சத்து இயக்கம், ஸ்வச் பாரத் இயக்கம் போன்ற அரசின் பல்வேறு முன் முயற்சிகளால் பொது சுகாதார

நிலவரங்கள் மேம்படுவதுடன், பொருளாதாரமும் வலுப்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார். சுகாதாரத் துறையின் மேம்பாடு என்பது, நாட்டில் ஆளுகை மற்றும் வளத்தை மேம்படுத்துவதற்கான முதலீடே தவிர, செலவு அல்ல என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*சேவா சப்தாஹ்- செமி கண்டக்டர்* 1 (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை- நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. **இண்டியா செமி கண்டக்டர் இயக்கம்** மூலமாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, நாட்டின் எதிர்காலத்தை எவ்வாறு வடிவமைத்து வருகிறது என்பது குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- செமி கண்டக்டர்* 2 (10)

**(வாய்ஸ்)**

நவீன மின்னணுவியல் துறைக்கு அடிப்படையான செமி கண்டக்டர்கள், நவீன கருவிகளின் செயல்பாடுகளுக்கு பின்னணியில், அவற்றின் மூளையாகவும் திகழ்கின்றன. 2021 ஆம் ஆண்டில் இண்டியா

செமி கண்டக்டர் இயக்கம் தொடக்கப்பட்டதை தொடர்ந்து, செமி கண்டக்டர் துறையில் இந்தியாவின் பயணம், வெறும் தொலைநோக்கு பார்வை என்பதில் இருந்து, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நிஜமான எதார்த்தமாக, மேம்பட்டு வருகிறது. செமி கண்டக்டர் சில்லுகள் தான், டிஜிட்டல் வைரங்கள் என்று, பிரதமர் திரு நரேந்திரமோடி, அண்மையில் புதுடெல்லியில் செமிகான் இண்டியா மாநாட்டில் பேசுகையில் கூறினார்.......

**( வாய்ஸ்-மோடி)**

*சேவா சப்தாஹ்- செமி கண்டக்டர்* 3 (17)

இண்டியா செமி கண்டக்டர் இயக்கத்தின் கீழ் நாட்டில், 76 ஆயிரம் கோடி ரூபாய் செமிகான் இண்டியா திட்டம் அமலாகி வருகிறது. இந்தியாவில் செமி கண்டக்டர் மற்றும் காட்சித் திரைகளை தயாரிக்க, இத்திட்டத்தின் கீழ், 50 சதவிகித நிதி ஆதரவு அளிக்கப்படுகிறது. வடிவமைப்புடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், 280 க்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களும், 70 க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் -அப் நிறுவனங்களும் பயன்பெற்றுள்ளன. மின்னணு உதிரி பாகங்களை தயாரிப்பவர்களுக்கும், SPECS திட்டத்தின் கீழ், 25 சதவிகித நிதி ஆதரவு அளிக்கப்படுகிறது.

செமிகான் இண்டியா – 2025 மாநாட்டில், இந்தியாவின் செமி கண்டக்டர் பயணம், முக்கிய மைல்கல் ஒன்றை எட்டியது. மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இம்மாநாட்டின் போது, முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது **கணிப்பொறிச் சில்லு**களை, முறைப்படி, பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் வழங்கினார். அரசின் இந்த எல்லா முன்முயற்சிகளின் தொகுப்பு, செமி கண்டக்டர் துறையில் சுயசார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைப் பிரதிபலிக்கிறது.

*சேவா சப்தாஹ்- செமி கண்டக்டர்* 4(3)

பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியிருப்பது போல, **"இன்றைய இந்தியா உலக அளவில நம்பிக்கையை தூண்டுகிறது. செமி கண்டக்டர் உட்பட எந்த துறையில் நெருக்கடி ஏற்பட்டாலும் உலகம் இந்தியாவை நம்ப முடியும்."**

*அமைச்சரவை* 1 (14)

ரயில்வே ஊழியர்களுக்கு, 78 நாள் ஊதியத்தை, **உற்பத்தி திறனுடன் இணைந்த** போனசாக வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால், 10 லட்சத்து 91 ஆயிரம் ரயில்வே ஊழியர்கள் பயன்பெறுவார்கள் என்றும், அரசுக்கு, ஆயிரத்து 865 கோடி ரூபாய் செலவாகும் என்றும், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ்,

இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நாட்டின் **கடல் சார் சூழல்** மற்றும் கப்பல் கட்டும் துறைக்கு **புத்துயிர் ஊட்ட**, 69 ஆயிரத்து 725 கோடி ரூபாய் **திட்டத் தொகுப்பு** ஒன்றை செயல்படுத்தவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக, அவர் கூறினார். தொடர்புடைய எல்லா முயற்சிகளையும் கண்காணிக்க, **தேசிய கப்பல் கட்டும் இயக்கம்** தொடக்கப்படும் என்றும் அவர் கூறினார். மத்திய அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் சில முக்கிய முடிவுகள் ....

நாட்டில் புதிதாக 5 ஆயிரத்து 23 **எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை** இடங்களை உருவாக்கும் வகையில், **மத்திய நிதி ஆதரவு திட்டத்தை**



நீட்டிக்கவும், புதிதாக 5 ஆயிரம் **முதுகலை மருத்துவ மாணவர் சேர்க்கை** இடங்களை உருவாக்கும் வகையில், 3 ஆம் கட்ட **மத்திய நிதி ஆதரவு திட்டத்தை** அமல்படுத்தவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

அறிவியல் – தொழில்நுட்பம் உள்ளிட்ட STEM துறைகளில், மனித வளம் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், 2 ஆயிரத்து 777 கோடி ரூபாய் திட்டத்தை செயல்படுத்த, **அறிவியல் – தொழில் ஆராய்ச்சி சபைக்கு** அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பீகாரில், **பக்தியார்பூர் – ராஜ்கீர் - திலையா** ரயில் பாதை பிரிவை இரட்டைப் பாதையாக மாற்றவும், **சாஹிப்கஞ்ச் – பேத்தியா** தேசிய நெடுஞ்சாலை பிரிவை, 4 வழிப்பாதையாக மாற்றவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*ஜிஎஸ்டி சீர்திருத்தம் 1* (9)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இம்மாதம் 22 ஆம் தேதி முதல் அமலாகி வரும் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், நாட்டு மக்கள், குறைக்கப்பட்ட வரி விகிதத்தில் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை பெற முடிகிறது. முன்பு, 5, 12, 18, மற்றும் 28 சதவிகிதம் என 4 அடுக்குகளாக இருந்த ஜிடிஸ்டி கட்டமைப்பு தற்போது, 5, 18 சதகிகிதம் என 2 அடுக்குகளாக மாற்றப்பட்டுள்ளதால், நாட்டு மக்களுக்கு வரிச்சுமையில் இருந்து மிகப் பெரிய ஆறுதல் கிடைத்துள்ளது. இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…….

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி சீர்திருத்தம்* 2 (13)

**<u>(வாய்ஸ்)</u>**

<u>அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், உணவு பொருட்கள் மீதான வரி கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதால், சாதாரண மக்களின்</u>

மாதாந்திர செலவு குறைகிறது. நடுத்தர மற்றும் குறைந்த வருமான பிரிவினர் செலவை குறைத்து பணம் சேமிக்க ஏதுவாக, பதப்படுத்திய காய்கறிகள், மற்றும், உணவுப் பொருட்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. பதப்படுத்திய பழவகைகள் மீதான வரியும் இதேப் போல குறைக்கப் பட்டுள்ளது. இதனால் உணவு பதனீட்டுத் துறை ஊக்கம் பெற்று, இத்துறையின் ஏற்றுமதி அதிகரிப்பதுடன், விவசாயிகளும் பயன் பெறுவர். புதிய சீர்திருத்தங்களால் உணவு பொருட்களின் விலை குறைவதுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் ஊக்கம் பெறுகிறது. குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியோர் உட்பட அனைத்து மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையில் புதிய ஜிடிஸ்டி சீர்திருத்தங்கள் அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*புதுச்சேரி காவல் நிலையம்* (6)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இனறு கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமிகாந்தன், காவல் துறை தலைவர் திருமதி ஷாலினி சிங் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

ரங்கசாமி (7)

புதுச்சேரியில் இந்திராநகர் தொகுதிக்கு உட்பட்ட கனகன் ஏரி, திலாசுப்பேட்டை மற்றும் மோகன் நகர் பகுதியில் 5 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி, பூமிபூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளும், உள்ளூர் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட் (5)

ஆசிய கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடரில் இன்றிரவு 8 மணிக்கு துபாயில் நடைபெறும் சூப்பர் – 4 போட்டியில், இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோத உள்ளன. இரு அணிகளும் தங்களது முதலாவது சூப்பர் 4 போட்டியில் வெற்றி பெற்றுள்ள நிலையில், இன்றைய போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு, இறுதி போட்டியில் இடம் உறுதியாகும்.

வானிலை (11)

இன்று வடக்கு ஒடிசா மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 12 மணி நேரத்தில்

வலுக் குறையும் என எதிர் பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, வடக்கு மற்றும் அதை ஒட்டிய மத்திய வங்கக் கடல் பகுதிகளில் நாளைய தினம் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வரும் 27 ஆம் தேதி வாக்கில், தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர கரையை கடக்க கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 30 ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி- காரைக்கால் பகுதிகளிலும் மழை நீடிக்கலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, சேலம் மாவட்டம் ஏற்பாட்டில் 5 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மோடி ஏலம் (7)

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட பொருட்களை ஆன்லைன் மூலமாக ஏலம் விடும் நடைமுறைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மக்கள் அனைவரும் இதில் ஆர்வமாக பங்கேற்க வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். இந்த ஏலம் மூலமாக கிடைக்கும் தொகை, கங்கை நதியை சுத்தப்படுத்துவதற்கான நமாமி கங்கே திட்டத்திற்கு செலவிடப்படும் என்பதையும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் சுட்டிக் காட்டி உள்ளார்.

புதுச்சேரியில், குடிநீரில் கழிவு நீர் கலப்பதை தடுக்கக் கோரி முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி இன்று ராஜ்நிவாஸ் முன்பாக திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், திரு நாராயணசாமி மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகளை அழைத்துப் பேசி, பிரச்சனைகளை சரிப்படுத்தும் வகையில், நகராட்சியும், பொதுப்பணித் துறையும் இணைந்து செயல்பட அறிவுறுத்தப் பட்டுள்ளதாக கூறினார். இத்தகவலை திரு நாராயணசாமி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.